DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 211 of 2017 |
| Deposition of witness | : | PW - 1 |
| Name | : | மாலா |
| Husband Name | : | ஆசைத்தம்பி |
| Age | : | 57 |

**Accused Present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06.07.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது ஏரலில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கொழுந்தனார் ஆவார். நான் ஆஜர் எதிரியின் மீது சந்தேகத்தின் பேரில் புகார் கொடுத்தேன். தற்போது நானும் ஆஜர் எதிரியும் சமாதானமாக செல்வதால் அவர் மீது நடவடிக்கை வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னை சமாதானமாக செல்லுமாறு யாரும் வற்புறுத்தவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள மாலா என்ற கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி புகாரில் உள்ள மாலா என்ற கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(சாட்சி அரசு தரப்பிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ள காரணத்தினால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்கப்படுகின்றன.)**

2. கடந்த 17.03.2017 ஆம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் நான் எனது வீட்டின் முன்பு தெருவில் இருந்தபோது ஆஜர் எதிரி என்னை பார்த்து கெட்ட

வார்த்தைகள் பேசி எனது கன்னத்தில் ஓங்கி அடித்து, எனது மகள் தெய்வராணியையும் தலைமுடியை பிடித்து இழுத்து கீழேத்தள்ளி தாக்கினார் என்றும் மேலும் எங்களை பார்த்து கொலைமிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்தினார் என்றும் புகார் கொடுத்துவிட்டு தற்போது அவருடன் சமாதானமாக செல்வதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.06 17:50:59 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

DEPOSITION OF WITNESS

N THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC 211 of 2017 |
| Deposition of witness | : | PW - 2 |
| Name | : | தெய்வ ராணி |
| Father Name | : | ஆசைத்தம்பி |
| Age | : | 29 |

**Accused present**

ISolemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06.07.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் ஏரலில் வசித்து வருகிறேன். நான் கிராம நிர்வாக உதவியாளராக உள்ளேன். ஆஜர் எதிரி எனது சித்தப்பா ஆவார். தற்போது எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை எதுவும் இல்லை. நாங்கள் சமாதானமாக செல்வதால் எதிரி மீது நடவடிக்கை வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**(சாட்சி அரசு தரப்பிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ள காரணத்தினால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்கப்படுகின்றன.)**

2. கடந்த 17.03.2017 ஆம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் நான் எனது வீட்டின் முன்பு எனது தாயாருடன் தெருவில் இருந்தபோது ஆஜர் எதிரி எனது தாயாரை பார்த்து கெட்ட வார்த்தைகள் பேசி அவரது கன்னத்தில் ஓங்கி அடித்து, எனது தலைமுடியை பிடித்து இழுத்து கீழேத்தள்ளி தாக்கினார் என்றும் மேலும் எங்களை

பார்த்து கொலைமிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்தினார் என்றும் போலீசாரின் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அவருடன் சமாதானமாக செல்வதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.07.06 17:51:06 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்